# பால்புதுமையினரும் சமூக ஊடகங்களும் : வாய்ப்புகளும் சவால்களும்

**சங்கீர்த்தனா, அ., அனுதர்ஷி, க.**
ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
skthanaa8@gmail.com

*இன்றைய நவீன உலகில் சமூக ஊடகங்களின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சமூக ஊடகத்தினைப் பயன்படுத்தாத நபர்களை விரல் விட்டு எண்ணி விடலாம் என்ற அளவிற்கு அதனுடைய வளர்ச்சி அபரிமிதமாகி விட்டது. ஒரு உடனடித் தகவலைப் பெற்றுக்கொள்ள சமூக ஊடகங்கள் தேவையான ஒன்றாகி விட்டன. சமூக ஊடகங்கள் பொதுவாக அநேக மக்களால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஊடகங்களாகும். பாரபட்சமின்றி தனது ஆதிக்கத்தைச் செலுத்தும் சமூக ஊடகங்களைப் பால்புதுமையினரும் அதிகம் பயன்படுத்துகிறார்கள். இந்த சமூக ஊடகங்களை பயன்படுத்தும் உயர் மக்கள் அதனூடாக வாய்ப்புகளையும் சவால்களையும் பெறுகின்றனர். "பால்புதுமையினரும் சமூக ஊடகங்களும் : வாய்ப்புகளும் சவால்களும்" எனும் இவ் ஆய்வானது யாழ் மாவட்டத்தில் வசிக்கும் பால்புதுமையினர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அடையும் வாய்ப்புகளையும் சவால்களையும் ஆய்வு செய்கிறது. இதற்காக ஆய்வாளரால் வினாக் கொத்து, நேர்காணல், குவிமையக் கலந்துரையாடல் ஆகிய முறைகள் மூலம் ஆய்விற்கான தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. ஆய்வின் மாதிரிகளாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் பால்புதுமையினர் 50 பேர் பனிப்பந்து மாதிரி மற்றும் எழுந்தமான மாதிரி முறை மூலம் தேர்வு செய்யப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில் பால்புதுமையினர் அனைவரும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகிறார்கள். இதன் போது பொழுதுபோக்கு, விழிப்புணர்வு, பிரபலத்தன்மை, கல்வி போன்ற வாய்ப்புகளையும் ஆபாசமான கதைகள், புகைப்பட வன்முறை, ட்ரோலிங், தவறான கருத்துக்கள் போன்ற சவால்களையும் எதிர்கொள்வதாக ஆய்வாளரால் இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் பால்புதுமையினர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதனால் அதிகமான சவால்களை எதிர்கொள்வதாக ஆய்வின் முடிவில் இனங்காணப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள் :** பால்புதுமையினர், சமூக ஊடகங்கள், சவால்கள், வாய்ப்புகள், முகப்புத்தகம்